(ஈ) உதகையில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகருக்கேற்பட்ட இடையூறு.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் ஊட்டியிலே படம் எடுக்கின்ற நேரத்தில் மிகப்பெரிய அசம்பாவிதம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றியெல்லாம் எந்த முறையில் கொண்டுவர வேண்டுமோ அந்த முறையில் கொண்டு வர வேண்டும். ராஜ்குமார் பிரச்சினையை எடுத்தால் பெங்களூர் பிரச்சினை என்று வந்துவிடும். ஆகவே, இதையெல்லாம் சட்டக் சபைக்குள் கொண்டு வரும்பொழுது மிகவும் ஜாக்கிரதையாகக் கொண்டுவர வேண்டும்.

(உ) திருச்சியில் நடைபெறும் சமூகவிரோதச் செயல்கள்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்திலே சமூக விரோதிகளின் கையோங்கி அதிகாரத்தையே அவர்கள் எடுத்துக்கொண்டு கலவரங்களை உண்டாக்கி, நகரத்தின் அமைதியைக் கெடுத்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரத்தை யார் கையிலிருந்து யார் கைப்பற்றினார்கள், எப்பொழுது கைப்பற்றினார்கள் என்றெல்லாமா நான் கேட்டுக்கொண்டிருக்க முடியும் ? இதை அனுமதிப்பதற்கில்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1984 மார்ச் 5]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984 - தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில்லைத் பொறுத்த வரையில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த பில்லிலே பேசுகின்றபோது சினிமாவைப் பற்றி எல்லா விஷயங்களையும் இங்கே பேசுகின்ற நிலைமை இருக்கின்றது. அவ்வாறு பேசுவது சரியாக இருக்காது. இச்சட்ட முன்வடிவிலே குறிப்பிடப்பட்ட பொருளுக்குச்சம்பந்தம் இல்லாத விஷயங்களை எல்லாம் பேசிக்கொண்டு போனால், அவையின் நேரம் வீணாகும். எனவே, பில் சம்பந்தப்பட்டவரையில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'பில்லின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொல்வதற்கு நான் முயற்சிக்கிறேன். இந்த பில்லினுடைய காரண நோக்க விளக்கத்திலே, ஒராண்டிலே மூன்று மாத காலத்திற்கு தமிழ்ப் படம் காட்ட வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டதாகவும் அது செல்லத்தக்கதல்ல என்று ஹைகோர்ட்டிற்க்குச்சென்று வாதாடியதன் காரணத்தால், அங்கே சட்டத்திலே இதற்குரிய இடம் இல்லாதபோது இவை எல்லாம் எப்படி வர முடியும் என்று கூறிவிட்டதன் காரணத்தால்தான், சட்டப்படி இந்த உத்தரவு செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறிய காரணத்தால்தான் அப்படிப்பட்ட உத்தரவு செல்லத்தக்க வகையில் ஒரு சட்டமாகக் கொண்டுவரவேண்டும் என்ற முறையில்தான் இந்த பில் இங்கே அறிமுகம் செய்யப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட கட்டுக்கோப்புகள ஒரளவுக்கு வருவதைப் பற்றி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கின்ற அதே நேரத்தில் ஏற்கெனவே போடப்பட்ட உத்தரவானது 3 மாதங்கள்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இப்போது கொண்டுவரப்பட்ட சட்டத்திலேயும், 3 மாதங்கள் தமிழ் படங்களைச் காட்டவேண்டும் என்று அரசு போட்ட உத்தரவு செல்லாது என்று ஹைக்கோர்ட் சொல்லிவிட்டதன் காரணத்தால்,